**விண்ணப்பங்கள் கோருவதற்கான அறிவித்தல்**

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் I இலுள்ள அதிகாரிகளை சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்துதல்.**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 06 டிசம்பர் 2016 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் சேவைப் பிரமாணத்தின் பிரிவு 10.3 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், 25 அக்டோபர் 2023 ஆம் திகதிய நிலவரப்படி கீழேயுள்ள 15 வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்கு, இலங்கை வெளிநாட்டு சேவையின் (இ.வெ.சேவை) பிரமாணக்குறிப்பின் உப பிரிவு 10.3.1 இன் பிரகாரம் விசேட தரத்திற்கான ஆட்சேர்ப்புக்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களிலுள்ள பிரிவுகளின் மூலம், இ.வெ.சேவை தரம் I இலுள்ள அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஆனபோதிலும், விண்ணப்பத்தின் இறுதிநாள் வரையில் ஏற்படும் வெற்றிடங்களும் இந்த நேர்முகப்பரீட்சை மூலமாகவே நிரப்பப்படும். இதுபற்றி விண்ணப்பதாரிகள் அறியத்தரப்படுவார்கள்)

2. அதன்படி, இலங்கை வெளிநாட்டுச் சேவையின் தரம் I இலுள்ள அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பணியின் சிரேஷ்ட நிலை வரிசையின் பதிவேட்டின்படி, வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட மூன்று (03) மடங்கிற்கு மேற்படாத எண்ணிக்கையிலுள்ள அதிகாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு இதன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| சிறப்புத் தர வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2020.01.04 | 1 |
| 2020.02.04 | 1 |
| 2020.02.11 | 1 |
| 2020.03.17 | 1 |
| 2020.06.09 | 1 |
| 2020.08.18 | 1 |
| 2020.11.16 | 1 |
| 2020.12.07 | 1 |
| 2021.03.02 | 1 |
| 2021.09.02 | 1 |
| 2021.09.27 | 1 |
| 2022.04.02 | 1 |
| 2023.01.01 | 1 |
| 2023.08.10 | 1 |
| 2023.10.05 | 1 |
| **மொத்தம்** | 15 |

3. **இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் I இலுள்ள அதிகாரிகளை சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான தகைமைகள்**

அ. தகுதி அளவுகோல் (இ.வெ.சேவை பிரமாணக்குறிப்பின் உப பிரிவு 10.3.1 இன்படி)

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கக்கூடிய நிறுவனம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்ட ஒரு நிறுவகத்திலிருந்து, சம்பந்தப்பட்ட துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். (29 ஜூலை 2020 ஆம் திகதிய அமைச்சின் அறிவுறுத்தல் தொடர்கள் இல.221 இன் பிரகாரம்).

ii. பதவி உயர்வுக்குத் தகுதிபெறும் திகதியில் இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் I இல் செயற்றிறனுள்ளதும் திருப்திகரமானதுமான ஐந்து (05) வருட சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும். தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றதிலிருந்து ஐந்து (05) சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

iii. பதவி உயர்வுக்குத் தகுதிபெறும் திகதியில் பதினெட்டு (18) வருடத்திற்குக் குறையாத செயற்றிறனுள்ள சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

iv. பதவி உயர்வுக்குத் தகுதிபெறும் திகதிக்கு உடனடி முந்தைய ஐந்து (05) வருட காலத்திலான பணிச்செயற்பாடானது, திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் இருக்கவேண்டும்.

v. உரிய திகதியில் மூன்றாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. **பதவி உயர்வு வழங்கப்படும் முறை**

இ.வெ.சேவை பிரமாணக்குறிப்பின் உப பிரிவு 10.3.2 இன்படி பதவி உயர்வுகள் சிரேஷ்ட நிலை மற்றும் தகுதி அடிப்படையில், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. சிறப்புத் தரத்திற்குரிய நியமனத்திற்கான பரிந்துரைகள், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் தகுதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அதே சமயம், விண்ணப்பம் அனுப்பும் கடைசித் திகதி வரையில் இருக்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட, மூன்று மடங்கிற்கு மேற்படாத எண்ணிக்கையிலுள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

4.2. நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட தகுதியின் அடிப்படையில் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதியின்படி சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்வு பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்த அலுவலர்கள், அந்த பதவி வெற்றிடம் ஏற்பட்ட திகதியிலிருந்து சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்வு வழங்கப்படுவார்கள். மேலும், அடிப்படை தகுதி சரிபார்ப்பு திகதி தொடர்பான சிரேஷ்ட நிலை வரிசைப் பட்டியலானது, பதவி உயர்வுக்கு முன் அந்த தேதியில் தகுதி பெற்ற அதிகாரிகளின் சிரேஷ்ட நிலை வரிசைப்படி செயன்முறைப்படுத்தப்படும்.

5. விண்ணப்பங்களைக் கோருவதற்கான இறுதித் திகதி வரையிலுமுள்ள இ.வெ. சேவை வெற்றிடங்களுக்கு பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்படுவதால், மேலே பந்தி 2 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்யும் அதிகாரிகள், கீழேயுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஒத்த விண்ணப்ப படிவத்தைப் பூர்த்திசெய்து 10 .04.2024 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ; செயலாளர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, குடியரசு கட்டிடம், ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு- 01 என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு ஆவணங்கள் அனுப்பப்படும் நடைமுறையைப் பின்பற்றியோ அனுப்புதல் வேண்டும்.

குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பங்களும் எந்தவொரு காரணத்திற்காகவும் ஏற்றுக்கொள்ளப்படாது மற்றும், தவறாகப் பூர்த்திசெய்யப்பட்ட அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. மேற்குறிப்பிட்ட அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்திசெய்யும் அதிகாரிகள் மட்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அத்துடன், பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டவாறு வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகளில் பதவி உயர்வுக்குத் தகுதியுள்ளவர்களாக சேவையிலிருந்த அதிகாரிகள், அத்திகதிக்குப் பின்னராக சேவையிலிருந்து ஓய்வுபெற்ற போதிலும், பந்தி 3 இலுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்பவர்களாகவிருப்பின், இந்த பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கமைவாக,

அருணி விஜேவர்த்தன
செயலாளர்
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

04 மார்ச் 2024.